
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர்-19 இதழ்-2 பிப்ரவரி - 2006



Price : Rs. 5/-

கிறிஸ்துவின் சபை

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

✆ 04257 - 230030 Cell : 98427 - 30382 , 98428 - 30382

E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

**TV PROGRAM**

Every Monday
**SS MUSIC TV**
Time : 7.00 to 7.30 am.

Every Saturday
**TAMILAN TV**
Time : 7.15 to 7.30 am.
Every Sunday
Time : 9.45 to 10.00 pm.

EDITOR OF THE
THIRUMARAI AASAAN
MAGAZINE
PREACHES
THE GOSPEL

## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. கிறிஸ்துவை பிரசங்கித்தல் ........ 9
3. பெண்கள் பகுதி ........ 14
4. வாலிபர் பகுதி ........ 19
5. சிறுவர் பகுதி ........ 23
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 25
7. நாம் அறியாதவர்களாக இருக்கின்றோமா? ........ 29

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 19 February - 2006 Issue - 2


ஆசிரியர் உரை

## நல்லவர்கள் துன்பப்படுவதை தேவன் ஏன் அனுமதிக்கிறார்?

சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த யோபு "என்னைக் குற்றவாளியென்று தீர்க்காதிரும். நீர் எதினிமித்தம் என்னோடே வழக்காடுகிறீர். அதை எனக்குத் தெரியப்படுத்தும். நீர் என்னை ஒடுக்கி உம்முடைய கைகளின் கிரியையை வெறுத்து, துன்மார்க்கனின் யோசனையைக் கிருபையாய்ப் பார்க்கிறது உமக்கு நன்றாயிருக்குமோ" என்று கர்த்தரை நோக்கி முறையிடுகிறார். (யோபு 10:2,3).

அதே விதமான மனக் குழப்பத்தோடு இன்றைக்கும் கோடிக்கணக்கான மக்கள் தேவனுடைய செயல்பாடுகளைக் குறித்து விளங்கிக் கொள்ள முடியாமல் "கர்த்தர் என்னை வெறுக்கிறாரா? அதனால்தான் நான் இப்படி வேதனையில் உழல்கிறேனா? பலவிதமான பாவங்களைக் கூசாமல் செய்கிற எத்தனையோ பேர் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் போது எனக்கு மட்டும் ஏன் இந்த வேதனை? என்று கேட்டு மருகுகின்றனர்.

பட்டயத்தை எடுக்கிறவன் பட்டயத்தால் சாகிறான்; ஒரு குடிகார ஓட்டுநர் பயங்கர விபத்துக்குள்ளாகிறான். சதா சிகரெட்டும் கையுமாக அலைகிறவன் காசநோயால் பீடிக்கப்படுகிறான். அதில் ஒரு நியாயம் இருக்கிறது. ஆனால் ஒரு பாவமும் அறியாத அப்பாவி மக்கள் வெடி குண்டுகளுக்கு இரையாவதும், பள்ளி செல்லும் சிறார்கள் விபத்துக்குள்ளாகி மடிவதும், பால் மணம் மாறாத பச்சிளங் குழந்தைகள் பலவித கொடிய நோய்களால் பீடிக்கப்படுவதும் ஏன்?

கடவுள் என்று ஒருவர் இருக்கிறாரா? அவர் அன்பும், இரக்கமும் கருணையும் உள்ளவர் என்றால், ஏன் இவ்வளவு துன்பங்களை அவர் படைத்த உலகத்தில் அனுமதித்துக் கொண்டிருக்கிறார்? ஒரு வேளை உலகத்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளும் சக்தியை இழந்துவிட்டாரா? கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது என்றால், ஏன் இப்படி நல்லவர்கள் துன்பப்படுவதையும் துன்மார்க்கர்கள் செழித்து வாழுவதையும் அனுமதிக்கிறார்? இது போன்ற கேள்விகளுக்கு விடை தெரியாத காரணத்தால் ஒரு சிலர் கடவுளே இல்லை என்று சொல்லும் அளவுக்குப் போய் விடுகிறார்கள். ஏனெனில், கடவுள் ஒருவர் இருந்தால் இவ்வளவு கொடுமைகளைப் பார்த்துக் கொண்டிருக்கமாட்டார் என்று மனம் வெதும்பி விரக்தியடைந்து குறைப்பட்டுக் கொள்கின்றனர். வேறு சிலர் கடவுள் இருக்கலாம். ஆனால் அவரைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில், அவரை நினைத்துப் பார்த்துப் பெருமைப்படும் அளவுக்கு அவர் நல்லவரும் வல்லவரும் அல்லர் என்று நினைக்கின்றனர். இன்னும் சிலர், பாவம், கர்த்தர் என்னமோ நல்லவர் தான். ஆனால், நாளுக்கு நாள் பாவத்தில் திளைத்து, கலகம் செய்கிற மக்களோடு எத்தனை நாளுக்குத் தான் போராடுவார்? எப்படியோ தொலைந்து போகட்டும் என்று கண்டு கொள்ளாமல் இருக்கிறார்? என்கின்றனர். ஆனால் சிலபேர், எல்லாம் வல்ல இறைவன் அன்பும், அருளும் நிறைந்தவர், ஞானமுள்ளவர் எல்லாவற்றையும் ஒரு நோக்கத்துக்காகத் தான் செய்கிறார் என்று நம்புகின்றனர்.

இப்படி கோடிக்கணக்கான மக்கள் தங்களுக்குத் தோன்றுகிற படியெல்லாம் இறைவனின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்கிற வேளையில் நான் மட்டும் எனக்கு எல்லாம் தெரியும். கடவுள் என்னோடே பேசி அதன் சரியான காரணங்களை இரகசியமாக எனக்கு வெளிப்படுத்தினார் என்று கூறிப் பெருமையடித்துக் கொள்ள நான் விரும்பவில்லை. அல்லது இவைகளையெல்லாம் நமக்குத் தெளிவுபடுத்தித்தான் ஆகவேண்டும் என்று கோருவதும், எதிர்பார்ப்பதும் நியாயமுமல்ல.'' **ஆகையால் நான் எனக்குத் தெரியாதவைகளையும், என் புத்திக்கு எட்டாததையும் நான் அறியாததையும் அலப்பினேன் என்று தான் தேவனுடைய செயல்பாடுகளுக்கான காரணங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்று முயன்று தோற்றுப்போன யோபு சொல்லுகிறதைக் கவனியுங்கள்.** (யோபு 42:3).

ஆயினும், நாம் சோர்ந்து போக வேண்டிய அவசியமில்லை தேவன் தமது அநந்த ஞானத்தால் மனுக்குலத்துக்குத் தந்தருளியிருக்கிற பரிசுத்த வேதாகமத்தில் நம்முடைய பிரச்சனைகள் ஒவ்வொன்றுக்கும் தனித்

தனியாகத் தீர்வுகள் சொல்லப்பட்டுத் தான் இருக்கின்றன. தேடி வாசித்து ஆறுதலடைவோம் வாருங்கள்.

## உலக நடைமுறையில் கோளாறுகள் :

**''இதோ, தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார், அவர்களோ அநேக உபாய தந்திரங்களைத் தேடிக் கொண்டார்கள்'' என்று கூறுகிறார் ஞானி சாலமோன்** (பிர. 7:29) தேவனால் செம்மையாகப் படைக்கப்பட்ட உலகத்தை தன் கெடுமதியால் சீர்குலைத்து போட்டான். நாட்டு நடப்புகளைக் கவனித்துப் பார்த்தால், துன்பங்களும், வேதனைகளும் அனைத்து மக்களையும் அகில உலகத்தையும் கவ்விக் கொண்டிருக்கிறதைக் காணமுடியும். நல்லவர்களுக்குத் திண்டாட்டம், துன்மார்க்கர்களுக்குக் கொண்டாட்டம்.

அப்படியானால், மனிதர்கள் உலக நடப்புகளில் தலையிட்டுக் கெட்டுப் போகாதபடி படைத்திருக்கக் கூடாதா? அல்லது கெட்டது செய்யும் ஆற்றல் அற்றவர்களாக மனிதனைப் படைத்திருக்கக் கூடாதா? என்று கேட்கத் தோன்றுகிறது. படைப்பின் சிகரமாகிய மனிதனுக்கு தேவன் கொடுத்திருக்கிற தேர்வு செய்யும் உரிமம் மிகப்பெரிய ஆசீர்வாதம். அதை அவன் பயன்படுத்துவதில் கவனமாயிராவிட்டால் சில தவறான முடிவுகள் தவிர்க்க முடியாததாகி விடுகின்றன. அதைக் காரணம் காட்டி அந்த உரிமையை மறுப்போமானால் அதற்கு உரிமம் என்ற பெயர் பொருந்தாது.

எடுத்துக்காட்டாக, ஓட்டுரிமையை எடுத்துக்கொள்வோம். ஒருவன் தன் மனதுக்குப் பிடித்த ஒரு கட்சிக்கோ அல்லது தனி நபருக்கோ தன் வாக்கை அளிக்கலாம் என்று அரசியல் அமைப்பு உரிமம் கொடுத்திருக்கிறது. அதற்கு மாறாக அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கோ, மனிதனுக்கோ தான் ஓட்டளிக்க வேண்டும் என்று தாக்கீது பிறப்பித்தால் அது அரசியல் சாசனம் கொடுத்த குடியுரிமையைப் பறிப்பது ஆகும் அல்லவா? அதே போன்று, தேர்வு செய்யும் உரிமத்தை தேவன் மனிதனுக்குக் கொடுத்துவிட்டு, அவன் செயல்பாட்டைக் கட்டுப்படுத்த முயல்வது முறையாகாது. அப்படிச் செய்தால் அவன் ஒரு மனித இயந்திரமாகவோ அல்லது சாவி கொடுத்த பொம்மையாகவோ தான் இருப்பான். சுதந்தரமாய் செயல்பட முடியாது.

இவ்வுண்மையை சாத்தான் தனக்குச் சாதமாகப் பயன்படுத்திக் கொண்டு, தேவன் முதன் முதலில் படைத்த, ஆதாமையும், ஏவாளையும் வஞ்சித்து தேவனுக்குப் பிரியமில்லாத காரியத்தைச் செய்து, அவருடைய கட்டளையை மீறினார்கள். அதைத் தான் வேதாகமம் பாவம் என்று கூறுகிறது. எப்படி ''எய்ட்ஸ்'' என்னும் கொடிய நோய் சரீரத்தைச் சடுதியாய்த் தாக்கி, விரைவில் மரணமடையச் செய்கிறதோ அதைவிடக் கடுமையாய் பாவம்

பாவம் ஆன்மாவை பாதிக்கச் செய்து பல கேடுகளை உண்டாக்கிவிட்டது. (ரோமர் 1:18-32,5:12)

பாவம், உலகத்துக்குள் பிரவேசித்து மனிதனுடைய சுபாவத்தைக் களங்கப்படுத்தியதோடு நில்லாமல் தேவ கோபம் பல வழிகளிலும் வெளிப்படக் காரணமாயிற்று. மனிதனுக்கு ஆவிக்குரிய, சரீர மரணம் சம்பவிக்கச் செய்தது (ஆதி. 3:9) குழந்தைப் பேறு பயங்கர வேதனையுடன் நடைபெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. (ஆதி. 3:16) பூமி சபிக்கப்பட்டு முள்ளும் குறுக்கும் முளைத்து மனிதன் பாடுகளுடன் வாழ்க்கை நடத்த வேண்டிய அவசியத்தை உண்டாக்கியது. (ஆதி 3:17-19) ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் தேவனோடு கொண்டிருந்த நல்லுறவு துண்டிக்கப்பட்டது (ஆதி 3:23,24).

இந்த அவல நிலையை அப்போஸ்தலனாகிய பவுல் ''ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வசிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது'' என்று அங்கலாய்க்கிறார். (ரோமர் 8:22) இவைகளிலிருந்து நாம் தெரிந்து கொள்கிற உண்மை என்னவெனில், இன்றைய உலகம் தேவன் படைத்த பொழுது இருந்த மாதிரி இல்லை என்றும் இன்று உலகில் பெருகி வரும் பிரச்சனைகளுக்கு பாவமே முதல் காரணம் என்றும் துணிந்து கூறலாம்.

இதற்கு விமோசனமே இல்லையா? உண்டு. கருணை நிறைந்த தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை இந்த உலகத்துக்கு அனுப்பி மனுக்குலத்தை அழிவிலிருந்து மீட்டுக் கொள்ள வகை செய்திருக்கிறார் (யோவான் 3:16) அவரை விசுவாசித்து ஏற்றுக்கொண்டு அவருடைய உபதேசச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொண்டால் இம்மையிலும், மறுமையிலும் சமாதானமும், மகிழ்ச்சியுமுள்ள வாழ்க்கை வாழலாம்.

மாராவின் கசப்பான தண்ணீரை மதுரமாக்கிய தேவன், பிசாசின் வஞ்சகத்தால் சீரழிவுக்குள்ளான உலகத்தில் வாழ்கிற மக்கள் அவருடைய ஆலோசனையைக் கேட்டு நடந்தால் அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து இவ்வுலகத்தின் கேடுபாடுகளுக்குத் தப்பித்துக் கொள்ளும் மார்க்கத்தை உண்டு பண்ண வல்லவராயிருக்கிறார் (1கொரி. 10:13) மேலும் நமக்கு வருகிற சோதனைகளை மாற்றி அவைகளை நமக்கு நன்மைக்கேதுவாக மாற்றிப் போடுகிறார். (ரோமர் 8:28)

**I. சில சோதனைகளும், துன்பங்களும் நம்மை உஷார்ப்படுத்தி நமக்கு வரும் பெரும் அபாயங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள நம்மை ஏவுகிறது.**

எடுத்துக்காட்டாக, நமக்கு ஏற்படுகிற சில சரீர உபாதைகளை நம்முடைய சரீர உறுப்புகளில் ஏதோ ஒன்றோ, சிலதோ பழுதடைந்து கொண்டு

வருகிறது. அதைக் கவனி என்று எச்சரிக்கிறது. அதைப் புரிந்து கொண்டு வைத்தியம் செய்து கொண்டால், அவைகளைச் சீர் செய்து கொண்டு ஆரோக்கியமாக வாழலாம்.

**II. சில சோதனைகள் நமக்கு பொறுமை என்னும் நற்குணத்தைப் பெற்றுக்கொள்ள உதவி செய்கிறது.** (எபி. 10:36) "என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து அதை மிகுந்த சந்தோஷமாய் எண்ணுங்கள்" என்கிறார் யாக்கோபு (யாக். 1:2,3) சோதனைகள் கொஞ்ச காலப்பாடுகள் தான் என்றும், அவைகள் உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி நிலைநிறுத்துவதற்கு அவசியம் என்கிறார் பேதுரு (1பேதுரு 5:10).

**III. மனுக்குலத்தைக் குறித்து எப்பொழுதும் பிராது செய்வதே தொழிலாகக் கொண்டிருக்கிற சாத்தானின் வாயை அடைப்பதற்கு, தேவன் சில வேளைகளில் நமக்குச் சோதனையை கொடுக்கிறார்.** எடுத்துக்காட்டாக யோபுவின் வரலாற்றைக் கவனியுங்கள். யோபு உம்மை விருதாவாக சேவிக்கவில்லை. அவனுக்கு நீர் வசதியான வாழ்க்கையைக் கொடுத்திருக்கிறீர் அவைகளை நீர் பிடுங்கிக் கொண்டால் அவன் உம்மை சேவிக்கமாட்டான். மாறாக சபிப்பான் என்று சவால் விடுகிறான் சாத்தான். (யோபு 1:9-12) அதை மறுக்கும் வகையில், யோபுவை சோதித்துக் கொள்ளும்படி அனுமதி வழங்குகிறார் தேவன் (யோபு 2:3-7)ஆனால், யோபு சாத்தான் எதிர்பார்த்ததற்கு மாறாக "**தேவன் கையிலே நன்மையை பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ**" என்று கூறி துன்பங்களைப் பொறுமையோடே சகித்ததின் மூலம் பிசாசின் வாய் அடைக்கப்பட்டது. அவருக்கும் இரட்டிப்பான ஆசீர்வாதங்களும் கிடைத்தன. (யோபு 42:12) யாக் 1:12).

**IV. இன்னும் சில துன்பங்களும் உபத்திரவங்களும் தேவனை மகிமைப்படுத்தும் வகையில் ஏற்படுகின்றன.** யோவான் நற்செய்தி நூலில் நாம் வாசிக்கிற பிறவிக் குருடன் விஷயத்தில் சீஷர்கள் கேட்ட கேள்விக்கு ஆண்டவர் அளித்த பதில், "**இது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடம் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்**" என்கிறார். (யோவான் 9:3) அதே நற்செய்தி நூல் 11-ம் அதிகாரத்தில் மீண்டும் இயேசு "இந்த வியாதி மரணத்துக்கேதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது. தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார்" என்கிறார். (யோவான் 11:4).

**V. சில சோதனைகளும், துன்பங்களும் நம்மை கிறிஸ்துவின் குணாதிசயங்களைப் பெற்றுக்கொள்ள உதவுகிறது.**

குயவன் சட்டி பானைகள் செய்வதைக் கவனித்துப் பாருங்கள். அவைகளை வனைவதற்கு முன்னர் அதை நன்றாகப் பிசைந்து, மிதித்துப் பதப்படுத்துகிறான். அதைப்போன்று நமக்கு நேரிடுகிற துன்பங்கள் நம்மை கர்த்தருக்கேற்ற பிள்ளைகளாக மாற்றுகிறது. ''உபத்திரவம் பொறுமையையும் பொறுமை, பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறது என்று நாங்கள் அறிந்து உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்'' என்கிறார் பவுல் (ரோமர் 5:3-4).

நாம் கர்த்தரைச் சார்ந்து நிற்க ஏவுகிறது. கொடியானது திராட்சைச் செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய் கனி கொடுக்க மாட்டாதது போல நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனி கொடுக்கமாட்டீர்கள்.

நானே திராட்சைச் செடி; நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான். என்னையன்றி உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது' என்கிறார் இயேசு (யோவான் 15:4,5) அப்போஸ்தலன் பவுல கூட ''ஆயினும் பிழைத்திருக்கிறேன் இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் என்று கலா. 2:20லும், அதற்கு அவர் என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்தில் என் பலம் பூரணமாய் விளங்கும் என்கிறார். (II கொரி. 12:9).

ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என் மேல் தங்கும்படி என் பெலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன்.

அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பெலமுள்ளவனாக இருக்கிறேன். ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பெலவீனங்களிலும், நிந்தனைகளிலும், நெருக்கங்களிலும் துன்பங்களிலும் இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்'' என்கிறார் (கொரி 12:9,10)

**VII. நம்முடைய வாழ்க்கையைத் தூய்மைப்படுத்த உதவுகிறது**

சங்கீதக்காரன் ''எங்களைச் சோதித்தீர்'' வெள்ளியை புடமிடுவது போல எங்களைப் புடமிட்டீர்.

எங்களை வலைகளில் அகப்படுத்தி எங்கள் இடுப்புகளின் மேல் வருத்தமான பாரத்தை ஏற்றினீர். மனுஷரை எங்கள் தலையின் மேல் ஏறிப்போகப் பண்ணினீர். தீயையும், தண்ணீரையும் கடந்து வந்தோம். செழிப்பான இடத்தில் எங்களை கொண்டு வந்துவிட்டீர் என்று தங்களுக்கு

ஏற்பட்ட துன்பங்களுக்கு ஈடுகட்டி பல மடங்கு ஆசீர்வாதங்களைக் கொடுத்ததாக மகிழ்ச்சி தெரிவிக்கிறார் (சங். 66:10-12)

அப்போஸ்தலன் பேதுரு "இதிலே நீங்கள் மிகவும் சந்தோசப்படுகிறீர்கள்; என்றாலும் துன்பப்பட வேண்டியது அவசியமாதலால் இப்போது கொஞ்ச காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும், கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்" என்கிறார் (1பேதுரு 1:6,7)

**VIII. சில துன்பங்கள் நம்மைச் சீர்திருத்தம் செய்வதற்காகக் கொடுக்கப்படுகின்றன.**

"கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ, அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல, உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்.

நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாய் இருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார். தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?

எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப் பிள்ளைகளாயிருப்பீர்களே.

அன்றியும் நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும் போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்க வேண்டுமல்லவா?

அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சகாலம் சிட்சிக்கிறார்கள்; இவரோ நாம் அஞ்சி நடந்திருக்க நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்க வேண்டுமல்லவா?

அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்ச காலம் சிட்சிக்கிறார்கள்: இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்.

"எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும். ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத்தரும்" என்கிறார் எபிரேய நிருப ஆசிரியர் (எபி. 12:5-11)

**IX. இன்னும் சில துன்பங்கள் நம்முடைய ஊழியத்தை அனுபவ ரீதியாகச் செய்ய உதவுகிறது.**

''தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே எந்த உபத்திரவங்களிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி எங்களுக்கு வரும் சகல உபத்திர வங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்.

எப்படியெனில் கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறது போல கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது.

ஆதலால், நாங்கள் உபத்திரவப்பட்டாலும் அது உங்கள் ஆறுதலுக்கும், இரட்சிப்புக்கும் ஏதுவாகும்; நாங்கள் ஆறுதல் அடைந்தாலும் அதுவும் உங்கள் ஆறுதலுக்கும், இரட்சிப்புக்கும் ஏதுவாகும்; நாங்கள் பாடுபடுகிறது போல நீங்களும் பாடுபட்டுச் சகிக்கிறதினாலே அந்த இரட்சிப்புப்பலன் செய்கிறது.'' (II கொரி. 1:4-6).

ஆகவே, நண்பனே, சகோதரியே கலங்க வேண்டாம். கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பார்த்து, அவருடைய பிள்ளைகளுக்கு நன்மையே செய்கிறார் என்று அறிந்து நம்பிக்கையோடு நம்முடைய நாட்களை அவருடைய பணியில் செலவிடுவோமாக!

**சகோ. E.Z. செல்வநாயகம்**

## நினைவாக



''**தி**ருமறை ஆசான்'' இதழின் நிறுவன ஆசிரியர் **சகோ. E.Z. செல்வநாயகம்** அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்து 9.2.2006-டன் 13 ஆண்டுகள் நிறைவடைகிறது. அவர் நினைவாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

- ஆசிரியர்

## கிறிஸ்துவின் சபையில் அங்கமாவது எப்படி?

1. நற்செய்தியை கேட்க வேண்டும் – ரோம. 10:17, யோவா. 20:20
2. விசுவாசிக்க வேண்டும் – எபி. 11:6, ரோம. 3:28
3. பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும் – அப். 17:30, அப்.2:38.
4. கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டும். – மத். 10:32, ரோம. 10:10
5. பாவங்கள் மன்னிக்கப்பட ஞானஸ்நானம் பெற வேண்டும். – அப். 2:38, அப். 22:16.

# கிறிஸ்துவைப் பிரசங்கித்தல்

நம்முடைய பாடத்தின் கருப்பொருளே, ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாயிருக்கிற இயேசு கிறிஸ்துவைப் பற்றியதாகும். எருசலேமில் வாசமாயிருப்பவர்களிடம், கிறிஸ்து உங்களுக்கு பிரசங்கிக்கப்பட்டார் என்று அப்போஸ்தலன் பேதுருவால் கூறப்பட்டது (அப். 3:20). அதே எருசலேமில், பிரதான ஆசாரியர் மற்றும் ஆலோசனை சங்கத்தார் முன்பு அப்போஸ்தலர்கள் அழைக்கப்பட்டு, இனி இயேசுவின் நாமத்தை பிரசங்கிக்கக் கூடாது என்று கட்டளையிட்ட போது நடந்தது என்னவென்றால், "அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமான மடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தை விட்டுப் புறப்பட்டுப் போய், தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்" என வாசிக்கிறோம். (அப். 5:41,42).

தேவ வல்லமையை பெற்றுக்கொள்ளும் வரை எருசலேமில் காத்திருங்கள் என்று கிறிஸ்து தனது அப்போஸ்தலர்களுக்கு கட்டளையிட்டு, அவர்கள் வல்லமையைப் பெற்ற பின், எருசலேமிலும், யூதேயாவிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் தனது சாட்சிகளாக இருப்பார்கள் என்றும் கூறினார் (அப். 1:8) எருசலேமிலும், யூதேயாவிலும் சுவிசேஷம் மீண்டும், மீண்டும் பிரசங்கிக்கப்பட்ட பின், "அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான்", எனக் காண்கிறோம் (அப். 8:5). அதன் விளைவாக அநேகர் விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப். 8:12).

சவுல் மனமாற்றம் அடைந்த பின்பு, அப்போஸ்தலர் 9:20ல், "தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான்" என படிக்கிறோம். சவுலாயிருந்தவன், பின்பு பவுலென்று அழைக்கப்பட்டு, தெசலோனிக்கே பட்டணத்தில், யூதருடைய ஜெப ஆலயத்தில் பேசும் போது, "பவுல் தன் வழக்கத்தின்படியே அவர்களிடத்தில் போய், மூன்று ஓய்வு நாட்களில் வேதவாக்கியங்களின் நியாயங்களை எடுத்து அவர்களுடனே சம்பாஷித்து, கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்றும், நான் உங்களுக்கு அறிவிக்கிற இந்த இயேசுவே கிறிஸ்து என்றும் காண்பித்து, திருஷ்டாந்தப்படுத்தினான். அவர்களில் சிலரும், பக்தியுள்ள கிரேக்கரில் திரளான ஜனங்களும் கனம்

பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும் விசுவாசித்து, பவுலையும், சீலாவையும் சேர்ந்து கொண்டார்கள்". என்று அறிந்துகொள்ளுகிறோம். (அப். 17:2-4). அத்தேனே பட்டணத்தில் அவிசுவாசிகள் மத்தியில் பவுல், " இயேசுவையும் உயிர்த்தெழுதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்தான்" (அப். 17:18).

கொரிந்து பட்டணத்து விசுவாசிகளுக்கு பவுல் எழுதும்போது, "நாங்களோ சிலுவையில் அறைப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார். ஆகிலும் யூதரானாலும், கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப் பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவ ஞானமுமாயிருக்கிறார்". (1கொரி. 1:23,24) என்கிறார். மீண்டும் அவர், "நாங்கள் எங்களையோ பிரசங்கியாமல் கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையே இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்". (II கொரி. 4:5).

புதிய ஏற்பாட்டுப் புத்தகத்தில் இடம்பெற்றிருக்கும் சபை சரித்திர நூலாகிய அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தின், 8ம் அதிகாரத்தை நாம் புரட்டிப் படிக்கையில், "பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி; நீ எழுந்து, தெற்கு முகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தரமார்க்கமாய்ப் போ என்றான். அந்தப்படி அவன் எழுந்து போனான். அப்பொழுது எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும் அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்து கொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து; ஊருக்கு திரும்பி போகும்போது தன் இரதத்திலே உட்கார்ந்து, ஏசாயா தீர்க்க தரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான் ஆவியானவர்; நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்து கொள் என்று பிலிப்புடனே சொன்னார். அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய்ச் சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டு; நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான். அதற்கு அவன்; ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும் என்று சொல்லி; பிலிப்பு ஏறி தன்னோடே உட்காரும்படி அவனை வேண்டிக்கொண்டான். அவன் வாசித்த வேதவாக்கியம் என்னவென்றால் அவர் ஒரு ஆட்டைப் போல அடிக்கப்படுவதற்கு கொண்டு போகப்பட்டார்; மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப் போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார். அவர் தம்மை தாழ்த்தினபோது அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது; அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப் போயிற்று; அவருடைய வம்சத்தை யாராலே சொல்லி முடியும் என்பதே. மந்திரி பிலிப்பை நோக்கி; தீர்க்கதரிசி யாரைக் குறித்து இதைச் சொல்லுகிறார். தம்மைக் குறித்தோ, வேறொருவரைக் குறித்தோ? எனக்கு சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டான்.

அப்பொழுது பிலிப்பு பேசத்தொடங்கி, இந்த வேத வாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான். இவ்விதமாய் அவர்கள் வழி நடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி; இதோ தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான். அதற்கு பிலிப்பு; நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறின பொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய் விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான் என்று காண்கிறோம். (அப். 8:26,39).

மேலே நீங்கள் வாசித்த வேத பகுதியில், மந்திரி வேத வாக்கியத்தை வாசிப்பதை பிலிப்பு கேட்டான். அந்த மந்திரி ஏசாயா 53ம் அதிகாரத்தை வாசித்துக்கொண்டிருந்தான். அவன் வாசித்ததின் பொருள் என்னவென்று பிலிப்பு அவனிடம் கேட்டான், அதாவது வாசித்தது புரிகிறதா என்று கேட்டான். தீர்க்கதரிசி தன்னை குறித்துப் பேசுகிறாரா அல்லது வேறு ஒருவரைக் குறித்துப் பேசுகிறாரா என்று அந்த மந்திரி, பிலிப்புவினிடம் கேட்டான். பின்பு தான் பிலிப்பு, கிறிஸ்துவைப் பற்றிப் பேசும் அந்த வேத வாக்கியங்களை முன்னிட்டு, இயேசுவை குறித்து பிரசங்கிக்க தொடங்கினான்.

நாம் ஞானஸ்நானம், சபை மற்றும் உபதேச விஷயங்களை குறித்து போதிக்கும் போது, பிரிவினை சபை நண்பர்கள் நம்மைப் பார்த்து கிறிஸ்துவை மாத்திரம் பிரசங்கம் பண்ணுங்கள் என்று கூறுவதை நாம் அறிவோம். நாம் பிரிவினை வாதத்தைக் கண்டித்து, தேவன் தரும் ஒற்றுமையை குறித்து பேசும் போது, இயேசுவைப் பற்றி போதியுங்கள் மற்றவைகளை விட்டுவிடுங்கள் என்ற நம்மிடம் அவர்கள் வாதாடுவதுண்டு. நாம் ஏற்கனவே பார்த்த அநேக வேத வசனங்களும், குறிப்பாக அப்போஸ்தலர் 8ம் அதிகாரம், கிறிஸ்துவை பிரசங்கித்தலைப் பற்றிப் பேசுகிறது. ஆகவே, நாம் இப்பொழுது முக்கியமான ஒரு கேள்விக்கு வருகிறோம். அதாவது, கிறிஸ்துவை பிரசங்கித்தல் என்றால் என்ன? என்பதே அக்கேள்வி. அநேகர் இயேசுவைக் குறித்துப் பிரசங்கித்தல் என்றால், அவர் தேவகுமாரன், நமக்காக சிலுவையில் அவர் மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், கல்லறையிலிருந்து மூன்றாம் நாள் உயிரோடெழுந்தார் என்று பிரசங்கிப்பது என்று நினைக்கிறார்கள். மனித குலத்தின் இரட்சகராக அவர் இருக்கிறார் என்றும், அவர் நம்மை நியாயந்தீர்க்க ஒருநாள் வருவார் என்றும் போதிக்கிறார்கள். ஆனால், கிறிஸ்துவை குறித்துப் பிரசங்கித்தலில் இது மாத்திரம் போதுமான தாகயிருக்குமா? நாம் ஏற்கனவே பார்த்தது போல,

கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தல் என்றால், சுவிசேஷத்தைக் குறித்துப் போதித்தல் அல்லது ஆண்டவரின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலின் நற்செய்தியைக் குறித்து போதித்தலாகும். (1கொரி. 15:1-4; அப்போஸ்.16:10) தேவனுடைய வார்த்தையையும், தேவனுடைய இராஜ்யத்தையும் குறித்துப் போதித்தல் என்று வேதம் சொல்லுகிறது. (அப். 8:4; 2தீமோத். 4:2) இவைகள் எல்லாம் கிறிஸ்துவை பிரசங்கித்தல் என்பதோடு ஒத்துப்போகவில்லையா? இவை அனைத்திற்கும் ஒரே அர்த்தம் தானே? கிறிஸ்து பிரசங்கிக்கப்பட்ட போது, என்ன பிரசங்கிக்கப்பட்டது என்று நாம் அறிந்துகொள்ள, அப்பிரசங்கத்தின் விளைவை நாம் கண்டால் புரிந்து கொள்ளலாம். பெந்தெகோஸ்தே நாளிலே அப்போஸ்தலர்கள் பிரசங்கித்த போது, சுமார் மூவாயிரம் பேர் விசுவாசித்து, பாவத்திலிருந்து மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்று, சபையிலே கர்த்தரால் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். (அப். 2:41,47).

அப்போஸ்தலன் எட்டாம் அதிகாரத்தில் பிலிப்பு, சமாரியர்களுக்கு கிறிஸ்துவை பிரசங்கித்த பின் அநேகர் விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள். (8:12) எத்தியோப்பிய மந்திரியிடம் கிறிஸ்துவைக் குறித்து பிரசங்கித்த பின், வேதம் சொல்லுகிறது. இருவரும் தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்த போது, மந்திரி ஞானஸ்நானம் பெற வேண்டுமென்று எண்ணினான். பிலிப்பு அவனுக்கு தடை செய்யாமல், உன் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை என்று அவனுக்கு விளக்கிக் கூறினான். அதற்கு மந்திரி, நான் இயேசுவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, இரதத்தை நிறுத்தினான். இருவரும் தண்ணீருக்குள் இறங்கினார்கள், மந்திரிக்கு பிலிப்பு ஞானஸ்நானம் கொடுத்தான். இருவரும் தண்ணீரிலிருந்து கரை ஏறினார்கள். மந்திரி சந்தோஷமாக தன் வழியே போனான்.

இப்பொழுது, இன்னும் ஒரு கேள்வி நம்முன் எழுகிறது, கிறிஸ்துவை பிரசங்கிப்பதற்கும் விசுவாசித்து, மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்று, சபையின் அங்கமாவதற்கும் என்ன சம்மந்தமிருக்கிறது? கிறிஸ்து பிரசங்கிக்கப்பட்ட போது, அதைக் கேட்டவர்கள், விசுவாசித்து, மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள் என்று நாம் காண்கிறோம். அப்படியானால், அவர்கள் அதை கேட்டிருக்கத்தானே வேண்டும். அதாவது, கிறிஸ்து பிரசங்கிக்கப்படும் போது, கிறிஸ்து உபதேசித்த காரியங்களும் பிரசங்கிக்கப்படுகிறது. கிறிஸ்து என்னும் நபரை நாம் பிரசங்கித்து விட்டு, அவருடைய வாழ்க்கை, பாடு, மரணம், அடக்கம், உயிர்தெழுதல் அவைகளையும், அவர்தரும் இரட்சிப்பையும் பிரசங்கித்து விட்டு, அவர் தரும் இரட்சிப்பை ஒருவன் பெறுவதற்கு என்ன செய்யவேண்டும் என்பதை பிரசங்கியாமல் விட்டுவிட்டால் அப்பிரசங்கத்தினால் வரும் பலன் என்ன?

ஆகவே, கிறிஸ்துவை குறித்து பிரசங்கிக்க வரும் நாங்கள், அவர் யார் என்பதை மாத்திரம் நாம் பிரசங்கியாமல், அவர் யார்? அவருடைய சுவிசேஷம் எது? இரட்சிப்பைக் குறித்து அவர் என்ன போதிக்கிறார், நாம் இரட்சிக்கப்படுவது எப்படி? அவர் கட்டின சபை எது, நாம் எப்படிப்பட்டதொரு வாழ்க்கை வாழ வேண்டுமென்று அவர் போதித்திருக்கிறார்; அவருக்குக் கீழ்ப்படிந்தால் என்ன நம்பிக்கை நமக்கிருக்கிறது என்பதை எல்லாம் போதிக்கிறோம்.

என் நண்பர்களே, கிறிஸ்து உங்களுக்கு பிரசங்கிக்கப்பட்டதை கேட்டிருக்கிறீர்களா, அப்படி கேட்டிருந்தால் அது மாத்திரம் போதாது! அதினால் நீங்கள் பலனடைய வேண்டுமென்றால், அவரை நீங்கள் விசுவாசிக்க வேண்டும். பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும், அவரை தேவ குமாரனென்று அறிக்கையிட வேண்டும், அதன் பின்பு உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட ஞானஸ்நானம் பெற வேண்டும், அப்படி நீங்கள் செய்யும் போது, அவர் தமது சபையில் உங்களை சேர்ப்பார். அதன் பின்பு, இரட்சிக்கப்பட்டமனுஷனாக, ஒரு கிறிஸ்தவனாக, நீங்கள் கிறிஸ்துவுக்காக வாழ்ந்து, தேவனை ஆராதித்து, அவருக்குப் பணி செய்யலாம், அதன் பின்பு ஒருநாள் உங்கள் குடியிருப்பாகிய பரலோகத்திற்கு நீங்கள் சென்று அங்கு தேவனோடும், கிறிஸ்துவோடும், ஆவியானவரோடும், தூதர்களோடும் என்றென்றும் வாழலாம். நீங்களும் அந்த எத்தியோப்பிய மந்திரி போல கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுவீர்கள் என நம்புகிறோம்! உங்களுக்காக ஜெபிக்கிறோம்!! ஆமென்.

**J.C. CHOATE** **J.C. சோட்**


ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள்!!

**ஒன்பதாம் வேனிற்கால வேதாகம முகாம்**

**மற்றும்**

**திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கம்**

| இடம் : | நாள் : |
|---|---|
| YMCA வளாகம், ஏலகிரிமலை, வேலூர் மாவட்டம். | மே மாதம் 1,2,3 - 2006 (திங், செவ், புதன்) |

உணவும், தங்குமிடமும் இலவசம்

பதிவுக் கட்டணம் : பெரியவர்கள் ரூ. 80/- சிறியவர்கள் ரூ. 50/-

கிறிஸ்துவின் சபை

288, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

✆ 04257 - 230030, 230603, 98427- 30382, 98428 - 30382

பெண்கள் பகுதி

# இருபாலரும் கூடியுள்ள இடத்தில் ஒரு பெண் பிரசங்கிக்க முடியுமா?

இன்றைக்கு இருக்கும் பெரும்பாலான சபைப் பிரிவுகளின் ஆராதனைகளில், பெண்கள் முக்கியப் பங்கேற்று செயல்படுகின்றனர். இப்படிச் செய்வதற்கும் அல்லது செய்ய அனுமதிக்கப்படுவதற்கும் காரணம், பெண்கள் தாழ்ந்தவர்களாகவும், முக்கியத்துவமற்றவர்களாகவும் கருதப்பட்ட, அந்தக் கால வேதாகம நாட்கள் கடந்து போய்விட்டதென்றும், இப்பொழுது ஆண்கள் செய்யும் எதையும் செய்வதற்கு இவர்களுக்கும் உரிமையுண்டு என்றும் எண்ணுவது தான். எப்படியோ காலங்காலமாய் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி எடுத்துப் போடப்பட்டுவிட்டது என்று எண்ணி, இப்புதிய சித்தாந்தத்தில் அநேகர் திளைக்கின்றனர். அதனால், இப்பொழுதெல்லாம் பெண்கள் பிரசங்கிக்கின்றனர். பேராயர்களாக ஏற்படுத்தப்படுகின்றனர். ஆண்கள் அணியும் அங்கிகளை தாங்களும் அணிந்து, ஆண்கள் செய்யும் வேலைகளையும் செய்கின்றனர்.

இப்புதிய சுயாதீனக் கொள்கை தேவனால் அங்கீகரிக்கப் பட்டிருக்கிறதா? வேதாகமத்தின் கொள்கைகள், அது எழுதப்பட்ட முதல் நூற்றாண்டு காலத்துக்கும், அதற்கு முந்திய காலத்துக்கும் மாத்திரம் பொருந்தக்கூடிய கோட்பாடுகளைக் கொண்டதா? இது, தேவச் சித்தத்தின்படி கொடுக்கப்படாமல், உண்மையாகவே மனிதனிடத்திலிருந்து வந்த வார்த்தையாக இருக்குமானால், நம்மையும் அறியாமல் பழங்காலக் கொள்கைகளினால் அடிமையாக்கப்பட்டிருக்கிறோம் என்பது பொருள். ஆனால், வேதவாக்கியங்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டதாய் இருந்து அது மனிதனுக்காக தேவனிடத்திலிருந்து கொடுக்கப்பட்டதாக இருக்குமானால், எந்த ஒரு மனிதனும் அதை, காலத்துக்கு ஒவ்வாதது என்றும், இக்காலத்துக்கு சம்பந்தம் இல்லாதது என்றும் சொல்வதற்கு அதிகாரம் பெற்றவனாய் இருக்க முடியாது.

இயேசு கிறிஸ்துவானவர் கூறுகையில், **"என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிற தொன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்"** (யோவான் 12:48) என்கிறார். மேலும் மத். 16:19-ல் **"பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும்**

**கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்**" என்றார். வேத வசனங்க ளெல்லாம் தேவனுடைய வார்த்தைகள் தான். அவைகள் மனிதனின் கோட்பாடுகள் அல்ல. "**வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது**" (2 தீமோத் :3:16). வேதாகமத்தை எழுதி முடிக்கிற தருவாயில், தேவன் கொடுத்துள்ள எச்சரிப்பைப் பாருங்கள். **இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது, ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால் இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் அவன் மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவ புஸ்தகத் திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப் பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப் போடுவார்.** (வெளி. 22:18,19)

தேவனுடைய வார்த்தைகளை எடுத்துக் கையாளுவதென்பது சாதாரண விஷயமல்ல. அவர் எழுதினதிலிருந்து தனக்கு அதிகாரமிருக்கிறது என்ற எண்ணத்தில் தன்னை தேவனுக்கு மேலாக எண்ணி, எழுதப்பட்டதற்கு விரோதமாக எதையாவது ஒருவன் மாற்றினால், அது அவனுக்கு அழிவைத்தான் கொண்டு வரும். அப்போஸ்தலனாகிய பவுல், (கலா :1:8) வசனப்பகுதிகளில் "**வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்ட வனாயிருக்கக்கடவன்**" என்கிறார். ஆணும், பெண்ணும், நியாயத்தீர்ப்பின் நாளில் ஆக்கினையை சந்தித்தாக வேண்டும்.

❀ "**இயேசு ஆராய்ச்சி மாநாடு**" (Jesus Seminar) **என்பது, வேதப்படிப்பில் "அதிகாரம் பெற்றவர்கள்" என்றும், மத உலகில் தங்களை "தலைவர்கள்" என்றும் அழைத்துக்கொள்ளும் ஒரு கூட்டத்தார். சுவிசேஷ உண்மையை ஆராய்ச்சி செய்த நிகழ்வு பற்றி ரசல் ஷோர்டோ** (Rusell Shorto) **என்பவர் ஒரு கட்டுரை எழுதினார். அவர் சொல்லும் போது, "இயேசு ஆராய்ச்சியாளர் மாநாட்டினர்" சுவிசேஷத்தை ஒவ்வொரு வார்த்தையாக ஆழ்ந்து ஆய்வு செய்கின்றனர், இப்படிச் செய்வது தன்னில் தானே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. சுவிசேஷத்தில் உள்ள எந்த வார்த்தைகளும், எந்த நிகழ்வும் வரலாற்றில் தோன்றிய இயேசுவுக்குச் சொந்தமானது என்று இவர்கள் கூடித் தீர்மானிப்பது இவர்களுடைய துணிகரமான செயலை நமக்கு வெளிப்படுத்துகிறது. அவர்கள், இப்படித் தீர்மானிப்பதின் மூலம் இயேசுவுக்குச் சொந்தமான வார்த்தைகளும், நிகழ்வுகளும் எதுவென்று சொல்லுகிறார்களோ அதைத் தவிர மற்ற வேத பகுதிகள் எல்லாம், "கதை சொல்பவர்களால்" கூட்டப்பட்டது என்று கருதப்படுகிறது என்கிறார் இவர்.**

பிரிவினைச் சபையில் இருக்கும் பிரசங்கிகள் மற்றும் தலைவர்களிடையே இருக்கும் இப்படிப்பட்ட மனோநிலை தான், பொதுவாக ஜனங்கள் வேதாகமத்தைக் குறைவாக மதிப்பிட்டு, ஆவிக்குரிய காரியங்களில் தங்கள் நடத்தையைக் குறைத்துக் கொண்டு, தங்களுக்குத் தற்கால கலாச்சாரமே போதும் என்று நினைத்து அதை நாடுகின்றனர்.

தன்னுடைய ஜனங்களை வழிநடத்தும்படியான பொறுப்பை தேவன் **மனிதனுடைய கற்பனையான உபதேசங்களுக்கு ஒரு போதும் விட்டு விடவில்லை.** அவர் நேரிடையான கட்டளைகளை தெளிவாக வெளிப் படுத்தி, அதை எழுதிக் கொடுத்து, இன்றைக்கு நாம் பயன்படுத்தும்படி பாதுகாத்து வைத்திருக்கிறார். ஆகவே, நமது ஆவிக்குரிய காரியங்களுக்கு வேதமே வழிகாட்டியாக அமையவேண்டும்.

பரிசுத்த வேதாகமத்தில், பெண்கள் பிரசங்கித்தார்கள் என்பதற்கு ஓர் உதாரணம் கூட கொடுக்கப்படவில்லை. அநேகப் பெண்கள் இயேசுவுக்குப் பின்சென்று, அவருக்கும், அவருடைய அப்போஸ்தலருக்கும் ஊழியம் செய்வதன் மூலம் அவர்களுடைய சில தேவைகளை சந்தித்தார்கள். ஆனால், அவர்களில் ஒருவர் கூட போதிப்பதற்கென்று நியமிக்கப்படவில்லை. புதிய ஏற்பாட்டில் எழுபது பேரை தெரிந்தெடுத்து அனுப்பும் போது, ஆண்களைத்தான் தெரிந்தெடுத்தாரே தவிர, பெண்கள் ஒருவர் கூட இல்லை. அப்போஸ்தலர்களை எடுத்துக் கொண்டால் அவர்களும் ஆண்களாகத்தான் இருந்தார்கள். பதினோரு பேருடன் எழுந்து நின்று பிரசங்கித்த சம்பவத்திலும், எந்த ஒரு பெண்ணும் போதித்தாகக் கூறப்படவில்லை.

மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும்படி இயேசுவின் தாயாகிய மரியாளுக்கு, வல்லமையான சாட்சி திட்டமாக இருந்தது. மகதலேனா மரியாளை எடுத்துக் கொண்டால், அவள் இயேசு கிறிஸ்துவால் அற்புதமாய் குணப்படுத்தப்பட்டவள். அத்தோடு இயேசுகிறிஸ்துவின் கல்லறையிலிருந்து உயிரோடு எழுந்தபோது, முதன் முதலாக அவளுக்குத்தான் காட்சியளித்தார். மாற்கு 16:14லில் அவிசுவாசத்திற்காக கடிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலர்களை விட, இந்த காலகட்டத்தில் இவள் மகத்தான விசுவாசம் உடையவளாக இருக்க வாய்ப்பிருந்தது. ஆனால், இவர்கள் இருவரில், ஒருவருக்காகிலும் போதிக்கும் அனுமதி கொடுக்கப்படவில்லை. மார்த்தாள், மரியாள் ஆகிய இருவரும் இயேசுவுக்கு மிகவும் பிரியமானவர்களா யிருந்தார்கள். மரித்துப்போன தங்கள் சகோதரனாகிய லாசருவை இயேசு கிறிஸ்து உயிரோடு எழுப்பியபோது, அதுபற்றி மற்றவர்களை நம்பச் செய்யும்படியாக எதுவுமே பேசவில்லை. இயேசு கிறிஸ்துவோ அல்லது அப்போஸ்தலர்களோ அவர்களை அவ்வாறு பேசும்படியாக கேட்டுக் கொள்ளவுமில்லை.

ஏன்? ஏனென்றால், சமுதாயத்திலாகட்டும், குடும்பத்திலாகட்டும், சபையிலாகட்டும், பெண்களின் பங்கு, ஆண்களின் பங்குகளிலிருந்து வேறுபட்டுள்ளது. பொதுஇடங்களில் சுவிசேஷத்தைப் பற்றி உத்தரவு சொல்லவும், கேட்கிறவர்கள், மனமாற்றமடைந்து, மற்றவர்களுக்குப் போதிக்கும் அளவில் தைரியமாய் பிரசங்கிக்கவும் ஆண்களுக்கு பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

பெண்களைப் பற்றிப் பார்க்கும்போது, அவர்கள் அமைதியாய் இருந்து கற்றுக் கொள்ள கடவர்கள் என்று போதிக்கிறது. சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்திரவில்லை. அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும். வேதமும் அப்படியே சொல்லுகிறது. அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக் கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக்கடவர்கள். ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே. (1கொரி. 14:34,35).

அன்றியும், புருஷர்கள் (கிரேக்கத்தில் "ஆண்கள்") கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலும் ஜெபம் பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன். ஸ்திரீகளும், மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும் தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக் கொள்ளுகிற ஸ்திரீகளும் ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்க வேண்டும்.

ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள், உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை. அவள் அமைதலாயிருக்க வேண்டும். என்னத்தினாலெனில், முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள், மேலும், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள். (1 தீமோ. 2:11-4).

இங்கே, ஆதியிலிருந்து, ஆணோடு பெண்ணுக்கிருக்கும் உறவு சம்பந்தமான இரண்டு கருத்துகளுக்கு, பரிசுத்த ஆவியானவர் நம்முடைய மனதைக் கொண்டு செல்வதை கவனியுங்கள். முதலாவது, ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். இரண்டாவது, ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை. ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள் என்பது.

மீண்டுமாகப் பார்த்தால், பெண்ணினம் சாத்தானுக்கு தொடர்ந்து செவி கொடுத்தே வருகிறது. அன்று, ஆதாம் பெலவீனமுள்ளவனாயிருந்து ஏவாளுடைய பாவத்துக்குத் துணை போனது போல, இன்றும் ஆண்கள் பெலவீனமுள்ளவர்களாயிருந்து தவறு செய்கிறார்கள். ஆகையால், பெண்கள் தான், பிரசங்க மேடைகளில் நின்று பிரசங்கிக்கிறார்கள். தங்களைப் பிரசங்கிகளென்று தங்களுக்குத் தாங்களே சொல்லிக் கொள்கின்ற சில பெண்களை கவனித்துப் பார்த்தால், பெரும்பாலானவர்கள் தாங்கள் அளிக்கும் செய்திகளிலும், தங்கள் உடைகளிலும், தங்கள் பேச்சுக்களிலும், தீவிரத் தன்மையுடையவர்களாக இருக்கிறார்கள். அதாவது, அத்துமீறி செயல்படுகிறார்கள். ஏவாளுடைய முன்மாதிரியைப் பின்பற்றி, தேவன் பெண்களுக்கென சொல்லியிருக்கிற புத்திமதிகளுக்கு துளியும் செவி கொடுக்காமல் நடந்து கொண்டால், நிலைமை எப்படி இருக்கும்.

இல்லவே இல்லை. பெண்கள் பிரசங்கிக்கும்படி தேவனால் அதிகாரம் பெறவேயில்லை.

***RACHEL NAGAYAM*** ***BETTY BURTON CHOATE***

## நாளும் நடப்பும்

1. பாலாற்றில் ஆந்திர அரசு அணைகட்டுவதற்குத் தமிழக அரசு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.
2. இஸ்ரேல் பிரதமர் ஷரோன் உடல்நிலை கவலைக்கிடம்
3. நாடும முழுவதும் ஒரு ரூபாயில் தொலைபேசி மூலம் பேசுவதற்கு BSNL நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.
4. தமிழக சட்டசபை தேர்தலுக்காக அரசியல் கட்சிகள் மும்முரமாக ஆயத்தமாகிக் கொண்டுள்ளது.
5. பாகிஸ்தான் சுற்றுப்பயணம் - இந்திய கிரிக்கெட் அணி ஒரு நாள் தொடரை வெல்லும் வாய்ப்பை பிரகாசப்படுத்தியுள்ளது.
6. மூன்று வருடத்திற்கு மேல் ஓரிடத்தில் பணியாற்றி வரும் அதிகாரிகளை மாற்ற தேர்தல் கமிஷன் உத்தரவு.
7. மத்திய அமைச்சர் வாசன் தொடர்ந்து காங்கிரஸ் தலைவர் பதவியிலும் நீடிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வாலிபர் பகுதி

# அரமனைத்தலைவனாகிய அனனியா

இஸ்ரவேலில் இருள்கண்டு இருண்டு கிடக்கும் உள்ளிதயக் கிழக்குகள் விடிவதற்காகவும், பாவத்தின் பலனினால் பரிசுத்தமிழந்து, பரமனின் உறவறுந்து மனிதகுலம் கண்ணீர் சிந்துவதைக் கண்ட வானபரன், வையகத்து மாந்தரை மீட்க மனிதகுலத்தின் அவலம் துடைக்க, கண்ணீரை சந்தோஷத்தின் சிகரமாய் மாற்ற யூதருக்கு ஆதிமகனாய் பிறந்து, பெற்றோருக்கு கீழ்ப்படிந்து வளர்ந்து, மனிதகுல மருத்துவனாய் திகழ்ந்து, எப்பொழுதும் யாருக்கும் நன்மை செய்பவராய் சுற்றித்திரிந்து, பரந்து, விரிந்து கிடக்கும் பாரனைத்திற்காகவும், தன்னுயிர் துறந்து, மரணச் சங்கிலிகள் தெறிபட மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து, நமக்காக பரிந்து பேச விண்ணு லகமேறிச் சென்று பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்த அருள்மொழி வல்ல திருஅவதாரமான இயேசுவின் திருநாமத்தினால் வாலிபர்களாகிய உங்களை வாழ்த்துவதில் பேருவகையடைகிறேன்.

எங்கும் அவசரம்! காத்திருக்க நேரமில்லை! எதிலும் பரபரப்பு என்று இயங்கிக் கொண்டிருக்கும் அவனியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை நீங்களும் ஏற்றுக்கொள்ளுவீர்களென நம்புகிறேன். இப்படி அவசரமும், பரபரப்பும் நிறைந்த அவனியில் உண்மை, தேவ பயம் என்பதெல்லாம் மருந்துக்குக் கூடயில்லை எனறு சொல்ல முடியவில்லை யென்றாலும், இருக்க வேண்டிய அளவில்லை என்று கூறுவதில் தவறில்லை என்று திடமாக நம்புகிறேன். நான் நம்புவதற்கு, சீறிவந்த சிங்கத்தின் வாயை கிழித்தெறிந்த சங்கீதக்காரன் துணை நிற்கிறான், அவன் சொல்லுவதை கவனியுங்கள், "…. உண்மையுள்ளவர்கள் மனுபுத்திரரில் குறைந்திருக் கிறார்கள்" (12:1) என்கிறான். உலகத்தில் உண்மையும், தேவபயமும்


**ஜெபியுங்கள் !** **நற்செய்தி கூட்டங்கள்** **பங்கு பெறுங்கள்!!**

திருமறை ஆசான் ஆசிரியர் **சகோ. ராஜநாயகம்** அவர்கள் வருகிற மார்ச் மாதத்தில் கலந்து கொண்டு தேவ செய்தி அளிக்கும் நற்செய்தி கூட்டங்கள்.

| நாள் : | இடம் : |
|---|---|
| மார்ச் 04-2006 | - பஸ்நிலையம் பின்புறம், சென்னிமலை. |
| மார்ச் 11-2006 | - YMCA வளாகம், திருப்பத்தூர். |
| மார்ச் 18-2006 | - கோர்ட் பின்புறம், குளித்தலை. |
| மார்ச் 25-2006 | - கௌரி கணேஷ் திருமண மண்டபம், செராங்காடு, திருப்பூர். |

குறைந்திருப்பதால், அதில் சிறந்து விளங்கிய அரமனைத் தலைவனாகிய அனனியாவை சந்திப்போம், அவனைப் பற்றி சற்று சிந்திப்போம். அவனை பின்பற்ற முயற்சி செய்வோம் வாருங்கள்.

## காவல் விசாரணைக்கு ஏற்படுத்தப்பட்டான்

பார்வோனின் பயங்கரப்பிடியிலிருந்து பார்வேந்தனாம் பரமதேவனின் பேருதவியால் மோசேயின் தலைமையின் கீழ் விடுதலை பெற்று, நாற்பது வருடமாய் வனாந்திர யாத்திரை செய்து முடித்து, பாலும், தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்குள் கால் எடுத்து வைத்தார்கள் இஸ்ரவேலர்கள். காலம் புரண்டோடியது, கானானைப் பெற்றவர்கள், அதை கொடையாய் கொடுத்த கர்த்தரை மறந்துபோனார்கள். பாவம் செய்த அவர்களை பகைவர்கள் கைக்கு ஒப்புக்கொடுப்பார் தேவன், மனந்திரும்பி மன்றாடுவார்கள், மனமிரங்குவார் மன்னவன், நியாயதிபதிகளான இரட்சகரை எழுப்புவார். இப்படி காலம் ஓடியது, சாமுவேலின் காலத்தில், கோமான் வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தனர் இஸ்ரவேலர்கள்.

இஸ்ரவேலின் ஜெயபலமானவர் தன் கோபத்தினால் கொற்றவனைக் கொடுத்தார். நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்தது, ராஜ்யம் பிளவுபட்டது, முதலில் வடக்கு ராஜ்யம் அசீரியாவுக்கு அடிமையாக கொண்டு போகப்பட்டது. இதைக்கண்டாவது, தெற்கு ராஜ்யம் மனந்திரும்பும் என்று எதிர்பார்த்தால், நமது எதிர்பார்ப்பு பொய்த்து தான் போகும். தெற்கு ராஜ்யமாகிய யூதாவும் சுமார் கி.மு. 606-ல் பாபிலோனுக்கு அடிமையாக கொண்டு போகப்பட்டது. எரேமியா தீர்க்கன் சொன்னது போல் எழுபது ஆண்டுகள் ஓடியது, தேவன் கோரேசைக் கொண்டு தம் ஜனத்தை சுமார் கி.மு. 536ல் விடுதலையாக்கினார். எருசலேமிற்கு திரும்பி வந்த ஜனங்கள ஆலயம் கட்டினார்கள்.

ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது ஆனால், அலங்கம் இன்னும் எருசலேமைச் சுற்றிக் கட்டப்படவில்லை. இந்நிலைமையைக் கேள்விப் பட்டான் சூசானின் அரண்மனையில் பானபாத்திரக்காரனான நெகேமியா, கேள்விப்பட்டவன், முயற்சி மேற்க்கொண்டான், எருசலேம் வந்தான், பல இடையூறுகளின் மத்தியில் அலங்கம் கட்டி முடித்தான். அந்த நேரத்தில் தான் நெகேமியா, "... அநேகரைப் பார்க்கிலும் உண்மையுள்ளவனும், தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்த அரமனைத் தலைவனாகிய அனனியாவையும் எருசலேமின் காவல் விசாரணைக்கு ஏற்படுத்தினான்". (நெகேமியா 7:2).

நமது அனனியாவைப் பற்றி ஆவியானவர் சொல்லும் முதல் குணத்தைக் கவனியுங்கள் **அவன் அநேகரைப்பார்க்கிலும் உண்மை யுள்ளவன்.** எனக்கன்பான வாலிபனே, ஒரு தலைவனுக்கு இருக்க வேண்டிய அரிய குணம். "உண்மை", இன்றைய நவீன உலகில் கிடையாப் பொருள் என்று சொன்னால் கூடத் தவறில்லை. சங்கீதக்காரனாகிய தாவீது தான் என்ன செய்வேன் என்று சொல்லும்போது, "தேசத்தில் உண்மை யானவர்கள்

என்னோடே வாசம்பண்ணும்படி என் கண்கள் அவர்கள் மேல் நோக்கமாயிருக்கும்; உத்தமமான வழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான்" என்கிறான்.

ஓரரசன் உண்மையுள்ளவர்கள் தன்னோடு இருக்க வேண்டுமென்று விரும்புகிறான். அனனியா ஓர் அரண்மனைத் தலைவன் என்பதை மறக்க வேண்டாம். குடும்பத்தலைவர்களே சில வேளையில் பண விஷயத்தில் உண்மையில்லாமல் நடக்கும்போது, ஓர் அரண்மனைக்கே தலைவன் என்றால், அவன் கையில் எத்தனை பணம் புளங்கியிருக்கும். எத்தனை பேர் இவன் தயவு தேடி, உதவி செய்யுங்கள் சன்மானம் தருகிறேன் என வந்திருக்கக் கூடும். ஒரு வேளை, கூட இருந்தவர்கள், பண விஷயத்தில் சரியில்லாமலிருந்தால், பிழைக்கத் தெரியாதவன் என்று எத்தனை நையாண்டி செய்திருப்பார்கள். அரமனை என்று வரும்போது, எத்தனை தகவல்கள் ரகசியமாக பாதுகாக்கப்பட வேண்டும். இன்று ராணுவத்தில் பணிபுரியும் உயர் அதிகாரிகள் கூட தேச ரகசியத்தை விற்றுவிடுவதை நாம் காண்கிறோம். ஆனால், நமது அனனியாவோ உண்மையுள்ளவன், அதிலும் அநேகரில் உண்மையுள்ளவன்.

தானியேலைக் குறித்து வேதம் சொல்லுவதைக் கவனியுங்கள், "..... தானியேலைக் குற்றப்படுத்தும்படி முகாந்தரம் தேடினார்கள்; ஆனாலும் ஒரு முகாந்தரத்தையும் குற்றத்தையும் கண்டுபிடிக்க அவர்களால் கூடாதிருந்தது; அவன் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் அவன் மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை" (தானியேல் 6:4) வாலிபர்களே, பாருங்கள் உண்மையுள்ளவரிடம் யாதொரு குற்றமும் குறையுமிராது என்பதற்கு இதைத் தவிர வேறொரு சான்று தேவையா? நமது அனனியா உண்மையுள்ளவன், அவனிடமும் யாதொரு குற்றமுமிராது என்று இதிலிருந்து நமக்கு புலப்படுகிறதென்றால் நீங்களும் ஏற்றுக்கொள்ளுவீர்கள் என நம்புகிறேன்.

வாலிபர்களே! இவனிடமிருந்த இன்னுமோர் குணம் யாதெனில், **இவன் தேவனுக்குப் பயந்தவன்**. எனக்கன்பான இளைய சமுதாயமே! இன்று தெய்வ பயமில்லை என்பதால் தான், கிடைத்தவரை சுருட்டு, வழிய வந்தால் விடாதே! என்றெல்லாம் சொல்லுகிறார்கள். ஆனால், நெகேமியா சொல்வதைப் பாருங்கள், "எனக்கு முன்னிருந்த அதிபதிகள் ஜனங்களுக்குப் பாரமாயிருந்து, அவர்கள் கையில் அப்பமும் திராட்சரசமும் வாங்கினதும் அல்லாமல், ...... அவர்கள் வேலைக்காரர் முதலாய் ஜனங்கள் மேல் அதிகாரம் செலுத்தினார்கள். **நானோ தேவனுக்குப் பயந்ததினால் இப்படிச் செய்யவில்லை.**" (நெக. 5:15) பார்த்தீர்களா, தேவனுக்குப் பயப்படும் பயம் நமக்கிருந்தால் பாவம் நம்மைக் கண்டால் பயப்படும். வேலைக்காரர் கூட அதிகாரம் செலுத்தினார்களாம், ஆனால் நெகேமியா தேவனுக்குப்

பயத்தினால் அப்படிச் செய்யவில்லை என்கிறார். அரமனைத்தலைவன் அனனியாவும் உண்மையும், தேவபயமுள்ளவன். இவனும் சரி, இவன் சகோதரன் நெகேமியாவும் சரி, ஜனங்களுக்கு நன்மை செய்தே பழக்கப்பட்டவர்கள் வருங்கால தூண்களே! நமது நாட்டிற்கும் இப்படித் தலைவர்கள் வேண்டுமென்று நீங்கள் ஜெபியுங்கள். அதற்கான முயற்சி எடுங்கள்.

முற்பிதாக்களில் ஒருவனான யோசேப்பை நீங்கள் அறிவீர்கள் அடுத்தவனின் மனைவி அழைத்தும் அவன் இச்சைக்கு உடன்படாமல், ஆடையை விட்டுவிட்டோடினான். அவனால் ஏன் அல்லது எப்படி அப்படி ஓட முடிந்தது? அவன் சொல்லுவதைக் கவனியுங்கள், நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி என்றான் (ஆதி. 39:7). ஆக, எனக்கன்பானவர்களே! தேவ பயம் நம்மை பொல்லாப்புக்கு விலக்கும்! யோபுவும் அப்படித்தானே! தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகினான். நமது அனனியாவும் அப்படித்தான் தேவ பயமுடையவன், ஆகவே, அவன் பொல்லாப்புக்கு விலகியிருப்பான் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. ஆகவே, எனக்கன்பான வாலிபனே! நாம் கொஞ்சத்தில் உண்மையுள்ளவர்களாயிருப்போம். அநேகத்திற்கு அதிபதியாக மாறுவோம்! தேவனுக்கு பயப்பட்டு அனனியாவைப் போல பொல்லாப்புக்கு விலகுவோம்!! ஆமென்.

*ஜே. பிக்கின்ஸ்*

## நற்செய்தி கூட்டங்கள்

*திருமறை ஆசான் ஆசிரியர்* **சகோ. ராஜநாயகம்** *அவர்கள் பிப்ரவரி மாதம் கலந்து கொண்டு தேவ செய்தி அளித்த நற்செய்திக் கூட்டங்கள்.*

| நாள் : | | இடம் : |
|---|---|---|
| **பிப்ரவரி 05-2006** | - | **B.D.O. காலனி, பல்லடம்.** |
| **பிப்ரவரி 12-2006** | - | **சிக்கண்ணா கல்லூரி எதிரில், திருப்பூர்.** |
| **பிப்ரவரி 19-2006** | - | **சௌத் இந்தியா மொசைக் கம்பெனி வளாகம், கவுந்தப்பாடி.** |
| **பிப்ரவரி 26-2006** | - | **T.B. ரோடு, சங்ககிரி.** |

சிறுவர் பகுதி

# கல்லறையிலிருந்து எழுந்தார்

எனதருமை தம்பி தங்கைகளே! இவ்வருடத்தின் இவ்விரண்டாவது மாதத்தில் உங்களை இப்பகுதியின் மூலம் சந்திப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி, இயேசு ஆண்டவர் இப்பூமியில் வாழ்ந்த போது உங்களை மிகவும் நேசித்தார், அதுமாத்திரமல்ல தேவனுடைய ராஜ்ஜியத்தில் ஒருவன் பிரவேசிக்க அவன் உங்களைப் போல மாறவேண்டும் என்றும் அவர் கூறினார். இம்மாதம் அவரைப் பற்றி சில காரியங்களை கற்றுக் கொள்ளுவோம் வாருங்கள்.


உங்களிடம் ஒருவர் வந்து, தன் நண்பன் மரித்து, மூன்று நாட்களுக்கு பிறகு உயிரோடு எழுந்தான் என்று சொன்னால் என்ன செய்வீர்கள்? எதையோ உளருகிறான் என்று கூறி விட்டுவிடுவீர்கள். இதேபோல் உங்களிடம் வந்து இயேசு கிறிஸ்து மரித்தார். ஆனால், மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தார் என்று சொன்னால் என்ன செய்வீர்கள்? அதை நீங்கள் நம்ப வேண்டும். ஏனென்றால் வேதம் கூறும் எல்லா சம்பவங்களுக்கு ஆதாரங்கள் உள்ளன. அதேபோல, உயிர்த்தெழுந்த சம்பவத்திற்கும் ஆதாரங்கள் உள்ளன. சரி, அவை என்ன என்று பார்ப்போமா?

**(i) <u>ஏனென்றால் வேதம் அப்படித்தான் கூறுகிறது</u>**

நாம் உயிர்த்தெழுதலை விசுவாசிக்க ஒரு சிறந்த காரணம் இதுதான். ஏனென்றால், வேதம் இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என கூறுகிறது. உங்களுக்கு ஒன்று தெரியுமா? எழுதப்பட்ட புத்தகங்களிலேயே மிகவும் சரியாக, பிழையின்றி, துல்லியமாக எழுதப்பட்டது வேதாகமம் தான்! அநேகம் பேர் வேதம் தவறு என்று நிரூபிக்க முயன்றும் முடியாமல் முயற்சி படுதோல்வியில் முடிந்துவிட்டது. வேதம் கூறும் மற்ற காரியங்கள் உண்மைதான் என்றால் இதுவும் உண்மையாகத்தானே இருக்க முடியும்.

**(ii) <u>தீர்க்கதரிசிகளினால் இந்த காரியம் முன்னுரைக்கப்பட்டது</u>**

இயேசு பிறப்பதற்கு சுமார் 1000 ஆண்டு முன்பு வாழ்ந்த தாவீது ராஜா கூறும்பொழுது கிறிஸ்து மரித்து உயிரோடு எழுவார் என்று கூறியிருக்கிறார் சங். 16:10ல் **என் ஆத்துமாவை பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தவான்களை அழிவைக் காண வொட்டீர்** என கூறியிருக்கிறார். இதை பேதுரு அப். 2:28ல் மேற்கோள் காட்டியிருக்கிறார். எனவே இதுவும் ஒரு ஆதாரமாயிருக்கிறது.



இதே போன்ற குகை கல்லறையில் இருந்து தான் மூன்றாம் நாளில் இயேசு உயிர்த்தெழுந்தார்

**(iii) பயம் மாறி விசுவாசம்**

இயேசு கைது செய்யப்பட்ட அந்த இராத்திரி சீஷர்களுக்கு ஒரு சோகமான நேரமாக இருந்திருக்கும். பயத்தினால் அனைவரும் ஓடி விட்டார்கள். தைரியமான பேதுருவும் இயேசுவை மூன்று முறை மறுதலித்தான். ஆனால் அடுத்த சில வாரங்களில், இயேசு உயிரோடு எழுந்தார் என அப்போஸ்தலர்கள் பிரசங்கித்தார்கள். அடியோ, சிறையோ, பயமுறுத்தலோ அவர்களை அப்பணியிலிருந்து தடுக்கவில்லை, அந்த சூழ்நிலையிலும் பிரசங்கித்தார்கள் (அப். 4:18-20)

இயேசு உயிர்த்தெழுந்தது, பயந்திருந்தவர்களை வல்லமையுள்ள பிரசங்கிமார்களாய் மாற்றியிருக்கிறது. பேதுரு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம் என்கிறார் (அப். 2:32).

இயேசு உயிரோடு எழுந்தார் என்பது நமக்கு மரணத்தை பற்றிய பயத்தை நீக்குகிறது. உண்மையாய் வாழ்கிற யாரும் இயேசுவைப் போலவே மரணத்தை ஜெயிக்க முடியும். இயேசுவை உயிரோடு எழுப்பினதற்கும், அந்த நம்பிக்கையை நமக்கும் தந்த தேவனுக்கும் நன்றியாய் ஜீவிக்க வேண்டும். அப்படியே ஜீவிக்க தேவன் சிறுபிள்ளைகளாகிய நமக்கு உதவுவாராக ஆமென்.

**R.A.R. NAYAGAM**

***யாக்கோபு நிருபத்தில் பூரணமானவைகள்***

1. பூரணமான பொறுமையின் கிரியை 1:4
2. பூரண தேவ ஞானம் 1:5
3. பூரண பாவம் 1:15
4. பூரணமான பரத்தின் வரம் 1:17
5. பூரண சுயாதீனப் பிரமாணம் 1:25
6. பூரணப்பட்ட விசுவாசம் 2:22

# விசுவாசத்தின் அடிப்படைகள்

முதலாம் நூற்றாண்டில் மனம் மாற்றம் அடைந்தவர்கள் ஞானஸ்நானத்திற்கு பிறகு எந்த சபையில் சேர்க்கப்பட்டார்கள் என்ற தலைப்பில் நாம் பாடங்களை படித்து வருகிறோம். சபையானது தேவனுடைய அநந்த நோக்கத்தில் இருந்து வந்தது என்று நாம் பார்த்தோம். அது பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டு முதல் நூற்றாண்டில் சமீபித்திருந்தது.

மாற்கு 9:1ல் இயேசு ராஜ்யம் அல்லது சபையைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார் என்பதை தெரிந்துகொள்வதற்காக அந்த வசனத்தை படிக்கும்படியாக கடந்த மாதம் நான் அழைப்பு விடுத்திருந்தேன். நம்முடைய அருமை இரட்சகர் அந்த வசனத்தில் என்ன சொன்னார் என்பதைப்பற்றி நாம் இந்த மாதம் படிப்போம்.

மாற்கு 9:1யை வாசியுங்கள் இயேசு இந்த வார்த்தைகளை முதல் நூற்றாண்டில் இந்த உலகத்தில் வாழ்ந்த நாட்களில் சொன்னார். இங்கே நிற்கிறவர்களில் சிலர் **மிக முக்கியமான ஒன்று நடைபெறுவதற்கு முன்பு** மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று தெளிவாக சொன்னார். என்ன நடக்கும்? சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடு வருவதைக்காண்பார்கள்.

மத். 16:18,19ல் நாம் படித்தபடி **ராஜ்யம், சபை** போன்ற வார்த்தைகளை ஆவிக்குரிய சரீரத்தைக் குறிப்பதற்காக இயேசு பயன்படுத்தினார். ஆகவே, சிலர் தங்கள் வாழ்நாளிலே ராஜ்யத்தைக் காண்பார்கள் என்று இயேசு சொன்னதின் பொருள் சிலர் சபையைக் காண்பார்கள் என்பதாகும். இயேசு சொன்னதில் வேறொரு முக்கியமான காரியம் இருப்பதைக் கவனியுங்கள். சிலர் சபை பலத்தோடே வருவதைக் காண்பார்கள் என்று சொன்னார், எனவே, இதை நிச்சயத்துடன் உறுதி செய்ய, முதல் நூற்றாண்டில் சபை ஸ்தாபிக்கப்பட்டபோது தேவனுடைய பலம் அல்லது வல்லமை நிரூபிக்கப்பட்டதை நாம் பார்க்க வேண்டும். அந்த அந்த வல்லமை ஊற்றப்பட்டதை நாம் வசனங்கள் மூலம் ஆராய்வோம்.

லூக்கா 24:46-49யை வாசியுங்கள் இயேசு கிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலர்களிடம் தாம் பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந் தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது என்று நினைவுபடுத்தினார். அந்த சமயத்தில் இயேசு ஏற்கனவே அவைகளை செய்திருந்தார் அதன் பிறகு சில நாட்களிலேயே மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் தம்முடைய நாமத்தினாலே அதாவது அவருடைய அதிகாரத்தினால் பிரசங்கிக்கப்படும் என்று குறிப்பிட்டார். மேலும் இயேசு அந்த விசுவாசம், அவருக்குள் இருக்கும் விசுவாசத்தை அறிக்கை செய்தல் மற்றும் ஞானஸ்நானம் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார். மாற்கு 16:15, 16; மத். 28:18-20; மத். 10:32,33. அந்த செய்தி எதுவரை பிரசங்கிக்கப்பட

வேண்டும்? அது சகல ஜாதிகளுக்கும் பிரசங்கிக்கப்படவேண்டும் என்று இயேசு சொன்னார். எங்கேயிருந்து அவருடைய சீஷர்கள் மனந்திரும்புதலுக்கும், பாவமன்னிப்புக்குமான செய்தியை பிரசங்கிக்கத் தொடங்குவார்கள்? அது **எருசலேமிலிருந்து** என்று நம்முடைய கர்த்தர் உறுதிப்படுத்தினார். தம்முடைய சீஷர்கள் அதற்கு சாட்சிகளாயிருக்கிறார்கள் என்று இயேசு சொன்னார். **இவைகள்** என்றால் அவருடைய **மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல்**, அவர்கள் இயேசுவின் மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் தனிப்பட்ட முறையிலே நேரடியாக கண்டபடியால், தாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் மற்றவர்களிடம் சாட்சியாக சொல்வார்கள்.

ஆனால், அதற்கு முன்பு என்ன நடக்கும்? கர்த்தர் தம்முடைய அப்போஸ்தலர்களிடம் என்ன செய்யும்படியாக சொன்னார்? இயேசு அவர்களை எருசலேமில் காத்திருக்கும்படியாகச் சொன்னார். எதுவரை அவர்கள் காத்திருக்க இயேசு விரும்பினார்? உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரை.

மாற்கு 9:1ல் ராஜ்யம் அல்லது சபை பலத்தோடே முதல் நூற்றாண்டில் வரும் என்று நம்முடைய இரட்சகர் சொன்னார். இப்போது லூக்கா 24:46,49ல் இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களிடம் அந்த வல்லமையை எருசலேமில் பெறுவார்கள் என்று சொன்னார். அந்த வல்லமையைப் பற்றி தேவன் என்ன வெளிப்படுத்தியிருக்கிறார் என்று ஆராய்வோம்.

அப். 1:8யை வாசியுங்கள் அப்போஸ் 1 ஆம் அதிகாரம் 2 ஆம் வசனத்தின்படி நம்முடைய இரட்சகர் தம்முடைய அப்போஸ்தலர்களிடம் பேசிக்கொண்டிருக்கிறார். அவர்கள் எதைப் பெறுவார்கள் என்று இயேசு சொன்னார்? **பெலன்!!** அந்த பெலன் எப்போது வரும்? **பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்களிடத்தில்** வரும்போது!

பரிசுத்த ஆவி மூலமாக அவர்கள் அந்த பெலனைப் பெற்ற பிறகு அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் இயேசுவுக்கு **சாட்சிகளாயிருப்பார்கள்.** அதாவது, அவர்கள் கர்த்தரிடத்திலிருந்து கண்டவைகளையும், கேட்டவைகளையும் சாட்சியாக அறிவிப்பார்கள்.

அப்போஸ்தலர்கள் எங்கே அல்லது எந்த இடத்திலிருந்து அந்த பெலனைப் பெறுவார்கள், எந்த இடத்திலிருந்து இயேசுவைப் பற்றிய சாட்சியை தொடங்குவார்கள்? **எருசலேமிலிருந்து!** நம்முடைய எஜமானைப் பற்றி எருசலேமில் சாட்சி கொடுத்தப்பிறகு வேறெங்கே சாட்சிகளாயிருப்பார்கள்? யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் சாட்சிகளாயிருப்பார்கள்.

லூக்கா 24:46-49ல் மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் எங்கே பிரசங்கிக்கப்படும் என்று இயேசு சொன்னார்? சகல தேசத்தாருக்கும்! எவ்வளவு அழகாக எல்லா வசனங்களும் ஒன்றாக இணைந்து ஒரே காரியத்தைப் பேசுகிறது என்று பார்க்கிறீர்களா? இந்த வசனங்களில் நம்முடைய அருமை இரட்சகர் சொன்ன காரியங்களை நாம சுருக்கமாக பார்ப்போம்.

1. முதல் நூற்றாண்டில் அவர் பேசிக் கொண்டிருந்த மக்களில் சிலர் **மரிப்பதற்கு முன்பு ராஜ்யம் அதாவது சபை பலத்துடன் வரும்.**

2. இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களிடம் உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்.

3. அவருடைய சாட்சிகள் அவருடைய அப்போஸ்தலர்கள் மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் எருசலேம் தொடங்கி பிரசங்கிப்பார்கள்.

4. இயேசுவின் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவி அவர்களிடத்தில் வரும்போது பெலனடைவார்கள்.

இது, நம்முடைய நான்காவது கேள்விக்கு பதில் அளிக்க வகை செய்கிறது, அந்த கேள்வி என்னவென்றால் புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள சபை எப்போது ஸ்தாபிக்கப்பட்டது? அந்த சபையானது இயேசு பரமேறின சில நாட்களிலேயே முதல் நூற்றாண்டில் பெந்தெகொஸ்தே நாளில் ஸ்தாபிக்கப்பட்டது.

அப். 1:12யை வாசியுங்கள் இயேசுவின் அப்போஸ்தலர்கள் இயேசு கட்டளையிட்டபடியே எருசலேமுக்குப் போனார்கள்.

அப்போஸ். 1:26; 2,1 ஆகிய வசனங்களைப் படியுங்கள் இயேசு அவர்களுக்கு கட்டளையிட்டபடியே பெந்தெகொஸ்தே நாளிலே அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு எருசலேமிலே கூடினார்கள்.

அப். 2:2-4யை நாம் வாசிக்கும்போது இயேசு ராஜ்யம் அல்லது சபை பலத்துடன் வரும் என்று சொன்னதின் நிரூபணத்தை நாம் காணமுடியும். இங்கே நாம் ஆவி பலத்துடன் ஊற்றப்படுவதை நாம் வாசிக்க முடியும், அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றார்கள். மேலும் பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் இதற்கு முன்பு எப்போதுமே கற்றிராத பாஷைகளில் பேச பெலனைக்கொடுத்தார். எனவே இயேசுவின் ராஜ்யம் அதாவது அவருடைய சபை பெந்தெகொஸ்தே நாளில் சுமார் கி.பி. 30ல் எருசலேம் பட்டணத்தில் ஸ்தாபிக்கப்பட்டது என்று நாம் திட்டமாக முடிவுக்கு வரமுடியும். அப். 2:14யை வாசியுங்கள் அந்நாளில் கூடியிருந்த மக்களிடம் பேதுரு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத் தொடங்கினார்.

அப். 2:24-32ல் நாம் வாசிக்கும் போது பேதுரு தானும் மற்ற அப்போஸ்தலர்களும் இயேசுவின் மரணத்திற்கும், உயிர்த்தெழுதலுக்கும் சாட்சிகளாயிருக்கிறோம் என்று சொன்னார்.

அப். 2:33-36ல் நாம் வாசிக்கும்போது “நீங்கள் சிலுவையிலறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும், கிறிஸ்துவுமாக்கினாரென்றும் அவரை தேவன் தம்முடைய வலது பரிசத்தில் உட்காரும்படிச் செய்தார் என்றும் பேதுரு தைரியமாகப் பிரசங்கம் பண்ணினார்.

அப். 2:37யை வாசியுங்கள் அந்த கூட்டத்தில் இருந்த சிலர் தங்கள் இருதயத்திலே குத்தப்பட்டு தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். இவர்கள் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள்.

அப். 2:38ல் நாம் வாசிக்கும்போது இயேசு கட்டளையிட்டபடி பேதுரு மனந்திரும்புதலையும், பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானத்தையும் பற்றி பிரசங்கித்தார்.

அப். 20:41ல் நாம் வாசிக்கும்போது, பேதுரு இன்னும் அநேக வார்த்தைகளுடன் மக்கள் இரட்சிக்கப்படும்படியாக வலியுறுத்தினார். பேதுரு பிரசங்கித்தவைகளை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

அப். 2:47யை வாசியுங்கள் இங்கே இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். இரட்சிக்கப்பட்டவர்கள் எல்லாம் சுவிசேஷத்தைக் கேட்டவர்கள் தான் சுவிசேஷத்தைக் கேட்டு இருதயத்தில் குத்தப்பட்டு, இயேசுவை விசுவாசித்து, மனந்திரும்பி, தங்கள் கடந்தகால பாவங்களிலிருந்து பாவமன்னிப்பைப்பெற ஞானஸ்நானம் பெற்றார்கள்.

இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் எங்கே சேர்த்தார்? தேவனால் ஏவப்பட்ட ஆசிரியர் சொல்லும்போது இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் சபையிலே சேர்த்தார் என்று சொல்கிறார். **இது கிறிஸ்துவின் சபை** பெந்தெகொஸ்தே நாளிலே எருசலேம் பட்டணத்தில் சுமார் கி.பி. 30ல் ஸ்தாபிக்கப்பட்டது என்பதை எந்தவித சந்தேகமுமின்றி உறுதிப்படுத்துகிறது. இதைத்தான் மாற்கு 9:1ல் இயேசு ராஜ்யம் பலத்தோடே வரும் என்று இயேசு சொன்னார். ஏனென்றால், அப்போஸ்தலர்களிடத்தில் பரிசுத்த ஆவி வந்தபோது அவர்கள் பெலனடைந்தார்கள்.

கர்த்தருக்கு சித்தமானால் அடுத்த மாதம் இன்னும் அதிகமாக சபையைப்பற்றிப் படிப்போம். அதுவரை இந்த கேள்வியைப்பற்றி யோசியுங்கள். கர்த்தர் உங்களை அந்த மெய்யான ஒரே சபையிலே சேர்த்தாரா? பெந்தெகொஸ்தே நாளிலே அந்த ஜனங்கள் செய்தவைகளை நீங்கள் செய்யவில்லையென்றால் கர்த்தர் உங்களை அவருடைய சபையில் சேர்க்கவில்லை. ஆனால், அவர்கள் செய்த காரியங்களை நீங்கள் செய்த நிமிடத்திலேயே அவர் அந்த ஆவிக்குரிய சரீரத்தில் சேர்த்துக்கொள்வார். அவருடைய சபையிலே சேர்க்கப்பட நம்முடைய அருமை இரட்சகருக்கு கீழ்ப்படிய உங்களுக்கு உதவ எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

Benny Martin | Charile Dipalma

# நாம் அறியாதவர்களாக இருக்கின்றோமா?

திருமறை ஆசான் வாசகர்களாகிய உங்கள் ஒவ்வொருவரையும் ஒருவராய் இருந்து சாவமையுள்ளவராய்ும், தாம் ஒருவரே ஞானத்தின் ஊற்றாக இருக்கின்ற தேவனுடைய குமாரன் கிறிஸ்துவினுடைய அன்பான நாமத்திலே வாழ்த்துவதிலே மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

நம் செய்தியின் வசனப்பகுதி 1 கொரி. 6:19-20 ஆகிய வசனப்பகுதிகளில் அடங்கி இருக்கிறது. வழக்கமாக நாம் செய்தியின் பின்னணியை அலசுவது போல் சிறு விளக்கத்திற்குப் பிறகு, செய்திக்கு கடந்து போகலாம்.

**<u>கொரிந்துவில் பவுல் :</u>** அப்போ 18:1-5 வசனப்பகுதிகளில் கொரிந்து பூகோள ரீதியாக அத்தேனேபட்டணத்திற்கு அடுத்ததாக இருந்தது கிலவுதிராயன் என்பவரின் ஆட்சிக்காலமாக இருந்தது. கி.பி. 62-63ல் லூக்கா இப்புத்தகத்தை எழுதியிருக்கிறார். கிலவுதிராயனின் ஆட்சி எந்த ஆண்டு எனத் தெரியவில்லை.

பவுல், சீலா, தீமோத்தேயு என்பவர்களடங்கிய சிறப்பான ஊழியக்குழு (அப். 18:11) ஒரு வருடமும் ஆறு மாதமும் அங்கே ஊழியம் செய்தனர் (1 கொரி. 1:22) யூதர்களும், கிரேக்கர்களும் அதிக அளவில் இருந்துள்ளனர்.

யூதர்கள் நியாயப்பிரமாண அறிவை வைத்துக்கொண்டு எல்லாவற்றிற்கும் எங்கே அடையாளம்? என்றனர். கிரேக்கர்களோ தங்கள் ஞானமே சிறந்தது என மமதையோடு இருந்தனர். (பிரசங்கி. 1:18) அறிவு பெருத்தவன் நோவு பெருத்தவன். பாரம்பரியம் என்ற அறிவு நோய் பிடித்த

**<u>யோவான் சுவிசேஷத்தில்</u>**

**கிறிஸ்துவைக் குறித்து ஏழு சாட்சிகள்**

1. பிதாவாகிய தேவன் ( 5:30, 37,38; 8:13-18)
2. கிறிஸ்து தாமே (5:17-27; 8:14,37)
3. பரிசுத்த ஆவியானவர் (15:26; 16:13-15)
4. வேத வாக்கியங்கள் (1:45; 5:39,46)
5. கிறிஸ்துவின் கிரியைகள் (5:17, 36; 10:25; 14:11; 15:24)
6. யோவான் ஸ்நானன் (1:7, 32-34; 5:33-35)
7. சீஷர்கள் (15:27; 19:35; 21:24)

மக்கள் மத்தியிலே கிறிஸ்துவின் சுவிசேஷம் படாத பாடுபட்டுக் கொண்டிருந்தது. நம்முடைய நாட்களில் கிறிஸ்தவம் துண்டாடப்பட்டு கிடக்கிறதே அதுபோலதான் அன்றைய நிலையும் இருக்கின்றவர்களின் அறியாமையை உணர்த்துவதே இவ்வசனப்பகுதி. அதிலே நமக்கு சில நல்ல பாடங்கள் இருக்கின்றது. வாருங்கள் பவுல் நமக்காக காத்துக் கொண்டிருக்கிறார்.

**I <u>நாம் தேவனுடைய ஆலயம் என அறியாதிருக்கிறீர்களா?</u>**

(1). ஆதி. 2:7 (2). ஆதி 5:1 தேவனாகிய கர்த்தர் மனிதனை அவரது சாயலில் உருவாக்கினார். தேவன் (1யோவா 4:8) அன்பே உருவானவர் (லேவி. 19:1-2) பரிசுத்தமானவர் (மல்கி 3:6) மாறாதவர் (1 யோவா 1:5) அவரிடம் எவ்வளவும் பாவமில்லை. அவரது ஜீவ சுவாசம் ஆதாமின் நாசியிலே ஊதப்பட்டது அது ஆதாம் துவக்கி நம் மட்டும் ஜீவனுள்ள ஆத்துமாகவே உள்ளது. உண்மை என்னவெனில் (எசேக்கியேல் 18:20)பாவத்திலே மூழ்கி ஆத்துமா செத்துவிட்டது (ரோம 6:23) பாவம் செய்து அதற்குச் சம்பளமாக மரணத்தை பெற்றுக்கொண்டோம்.

எபே. 2:1 கிறிஸ்து தமது ஜீவனை நமக்காகக் கொடுத்தார். யோவான் 6:63 (வார்த்தை) உயிர்ப்பித்தது நம் ஆத்துமாவை. இப்போது செத்தமனிதனின் அதாவது பழைய மனிதனின் செய்கைகளை குழிதோண்டி புதைத்து விட்டு. **2 கொரி. 5:17** புதுசிருஷ்டி, புதிய சிந்தனை, புதிய செய்கைகளை அப்படி ஒரு கிறிஸ்தவர் இருப்பாரானால் மெய்யாகவே அவர் தேவன் வாசம் செய்யும் ஆலயமாக இருப்பார். ஆனால், மத். 15:18-19 ஒரு இருதயம் தேவ ஆவியினால் நிறைந்து இருக்குமானால், பொய், பொறாமை, விபச்சாரம், வேசித்தனம், மதுபானம், புகைப்பழக்கம் மற்றும் சரீரத்தையும் ஆத்துமாவையும் கெடுக்கும் செய்கைகளும், சிந்தனைகளும் இருக்காது. அப்படி ஒருவரிடம் மேற்கண்ட காரியங்கள் இருக்குமானால் அது தேவனுடைய ஆலயம் அல்ல பிசாசின் கூடாரமாகவே இருக்கும். பிரியமானவர்களே, நாம் தேவனுடைய ஆலயம் என்பதை அறிந்திருக்கிறோமா? (1 கொரி. 3:16-17).

**II <u>நம்மை தேவனே உருவாக்கியிருக்கிறார் என்பதை அறியாதிருக்கிறீர்களா?</u>**

ஏசா 64:8 இப்பொழுதும் கர்த்தாவே நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண், நீர் எங்களை உருவாக்குகிறவர், நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை பிரியமானவர்களே அறியாமை எப்போதுமே ஆபத்து (நீதி 19:2) ஆத்துமா அறிவின்றி இருக்கலாகாது. நம் சரீரம் மண்பாண்டம் போன்றது. கண்களை விலையாய் கொடுத்து ஓவியம் வாங்குவதால் என்ன பிரயோஜனம்.

ஒரு குயவன் தன் கையிலுள்ள களிமண்ணை தன் விருப்பம் போல் உருவாக்குவது போல மனிதர்கள் ஒவ்வொருவரையும் தமது சித்தம் போல் செய்கிறார். நம் உயரம், நிறம் முகலட்சணம், யாவுமே அவரது விருப்பம் தான். சரீர அங்கஹீனங்கள் கூட, ஊமை, செவிடு, குருடு (யாத் 4:11) யாவரையும் தேவனாகிய கர்த்தரே உண்டாக்குகிறார். (யோவா 9:1-3) அது மனிதர்கள் செய்த பாவங்களல்ல. நம்மில் அநேகர் சரீர குறைபாடுகளுடனே இருப்பதை அறிந்தவர்களே, ஆகவே, பெருமைபடவும், சிறுமைப்படவும் வேண்டியதில்லை. ஆனால், HIV, AIDS மற்றும் போதையினால் மரணம் இவைகள் மனிதனே சம்பாதித்துக் கொண்டவை. இதற்கு தேவன் பொறுப்பாளியல்ல (ரோமர். 6:23) (யோவா 3:18-19) ஒளியாகிய கிறிஸ்து உலகத்தில் வந்திருந்தும் இருள்நிறைந்த (பாவம் நிறைந்த) இந்த உலகம் அவரை ஏற்றுக்கொள்ளாததே காரணம்.

ரோமர் 1:25-28 தேவன் அப்படிப்பட்டவர்களை கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். (பிர. 11:10) உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு இளவயதும், வாலிபமும் மாயை என்பதை அறிந்தால் நம் உள்ளம் தெளிவாகிவிடும்.

**III <u>நம் குடியிருப்பு பரலோகம் என்பதை அறியீர்களா? 2 கொரி. 5:1-10</u>**

அப்போஸ்தலனாகிய பவுல் சரீரத்தில் எப்படிப்பட்டவரோ! அதை நாம் அறியோம். ஆனால், அவரது ஆத்துமா வெகு அழகானது என மேற்கண்ட வசனப்பகுதி என்ன அருமையாக படம்பிடித்து காட்டி விட்டது பாருங்கள்.

(மத். 6:20), (பிலி. 3:20) பரலோகத்திலே சேர்த்துவையுங்கள் ஏனென்றால் நாம் நிரந்தரமாக அங்குதான் இருக்கப்போகிறோம் மத் 25:31-40 வசனப்பகுதி பொன்னெழுத்திலல்ல நம் இருதயத்திலே பதிய வேண்டும். பசித்தோருக்கு உணவளித்தோர், வஸ்திரமில்லாதவர்க்கு வஸ்திரம் கொடுத்தோர், வியாதியாய் இருந்தவர்களை அன்போடு விசாரித்தது என நற்கிரியைகளெல்லாம், இமெயில், ஷேட்டி லைட் என எந்த ஊடகமுமின்றி பரலோகத்திலே சேருகிறது.

(2 கொரி 4:18) காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள் காணப்படாதவைகளே நித்தியம். நம் ஆத்துமா, நித்தியம். பரலோகம் நித்தியம். நரகமாகிய அக்கினி கடல் நித்தியம். நாம் எங்கே செல்லப் போகிறோம் என நிர்ணயிப்பது இந்த சரீர வாழ்வு. இதனை அறிந்திருக்கிறோமா?

**<u>திருப்தி தராத உலகம் :</u>** மத். 27:3-5) **பணம் திருப்தி தந்திருந்தால்** 30 வெள்ளிக்காசை சம்பாதித்த யூதாஸ் நான்று கொண்டு செத்தது ஏன்? பதவி **புகழ் திருப்தி தரும்** என்றால் இஸ்ரவேலின் முதல் ராஜா சவுல் (2 சாமு 1:5-9) ஏன் தன்னையே கொலை செய்து கொண்டான். சரீர இன்பங்கள் நிலையானது என்றால் சாலமோன் தன் (பிரசங்கி நூலில்) மாயை, மாயை, எல்லாம் மாயை என்று கதறுகிறானே ஏன்? என சிந்தியுங்கள்.

1 யோவா 2:15 அதனாலே தான் உலகத்தில் அன்பு வைக்காதீர்கள் என நம்மை வேதம் எச்சரிக்கிறது. அன்பானவர்களே

ஓவியம் வாங்க கண்களை விலையாகக் கொடுத்துக் கொண்டிருக்கும் பரிதாபம் எப்படிப்பட்டது. சரீரத்தை பெரிதாக நினைத்து நித்திய வாழ்வை இழப்போர் எவ்வளவு பரிதாபத்திற்குரியவர்கள் பாருங்கள்.


**<u>எது திருப்தி தரும் :</u>** மத்தேயு 5:6 நீதியின் மேல் பசியை, தாகத்தை வையுங்கள் விசுவாசமே நீதி, யாரை விசுவாசிப்பது? தேவனை, கிறிஸ்துவை, அவர் இரத்தம் சிந்தி சம்பாதித்த ஒரே சபையை விசுவாசியுங்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசியுங்கள். நம்மை பரலோகம் வரை அழைத்துச்செல்வார். (1யோவா 2:25) அழியாத வாழ்வை அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். எங்களோடு இணைந்து வாருங்கள் ஈடு இணையற்ற தேவனுடைய அன்பை நாம் சுதந்தரிப்போம்.

**S. *பிச்சைமுத்து,*** தூத்துக்குடி

## *தேவனுடைய வார்த்தையின் தன்மைகள் / செயல்பாடுகள்*

**சங்கீதம் 19:7-11**

- குறைவற்றது (:7)
- ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது (:7)
- சத்தியமானது (:7)
- பேதையை ஞானியாக்குகிறது (:7)
- செம்மையானது (:8)
- இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறது (:8)
- தூய்மையானது (:8)
- கண்களைத் தெளிவிக்கிறது (:8)
- உண்மையாயிருக்கிறது (:8)
- நீதியாயிருக்கிறது (:9)
- பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கது (:10)
- எச்சரிக்கிறது (:11)
- கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலனிருக்கிறது (:11)



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661 / 87 - New Delhi

திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம்
நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.




# S.S. Music TV ல்

## திருமறை தியானம்

பிரதி திங்கட்கிழமை காலை 7.00 - 7.30 மணி

# தமிழன் டிவி யில்

## திருமறை தியானம்




பிரதி சனிக்கிழமை காலை 7.15 – 7.30 மணி

பிரதி ஞாயிறு இரவு 9.45 - 10.00 மணி

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக்
கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல்
வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து
பயன் பெறலாம். இது 16 பாடங்களைக் கொண்ட
ஓர் இலவச பயிற்சி.

---

**இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு
சான்றிதழ் வழங்கப்படும்.**

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள
வேண்டிய முகவரி

இயக்குனர்,
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.
தமிழ்நாடு. இந்தியா.